2017 ஜூலை 18] **[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]**

தீக்காயத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இ) மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழு அளித்துள்ள பரிந்துரைகளை தமிழக அரசு ஊழியர்களுக்குச் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி? உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இப்படியெல்லாம் கேட்கக்கூடாது. திரு. செழியன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

பிற்பகல் 12–05

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பது இங்கு இருக்கிற ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் நாம் அனைவரும் அறிவோம். அவர்கள் இன்று ஒரு பெரிய குழப்பமான நிலையில், ஜாக்டோ–ஜியோ ஆகிய இரண்டு தரப்பைச் சார்ந்த அரசு ஊழியர்களும்,ஆசிரியர்களும் இணைந்து போராட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். மத்திய அரசாங்கத்திற்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று, நானே அரசு ஊழியராக இருந்தபோது ஜாக்டோ–விலே போராடினேன். அப்போது கலைஞர் அவர்கள் மத்திய அரசு ஊழியருக்கிணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கினார். இப்போதும் அதேபோல, ஏழாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளது. அவர்கள் வைத்திருக்கிற ஒரு கோரிக்கை, மிக முக்கியமான கோரிக்கை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும். நான் நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டும். நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். உட்காருங்கள். இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) என்ன? இப்படி எல்லாம் செய்தால் நான் எப்படி எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க முடியும்? (குறுக்கீடு) முனைவர் பொன்முடி, அவ்வளவுதான் வாய்ப்பு. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எச். வசந்தகுமார், திருமதி எஸ். விஜயதரணி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. ச. பாண்டி... (குறுக்கீடுகள்) நான் வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருப்பதை முறையாகப் பயன்படுத்தத் தவறுகிறீர்கள். (குறுக்கீடுகள்) என்னை அவையை நடத்தவிடாமல், நீங்கள் நினைக்கிறபடி அவையை நடத்த வேண்டுமென்று சொன்னால், என்னால் அதற்கெல்லாம் கட்டுப்பட முடியாது. அவை விதிகளுக்குட்பட்டு நான் வாய்ப்புத் தருகிறேன். கொடுத்த வாய்ப்பில் அவருடைய கவனத்தை ஈர்த்து விட்டார். உட்காருங்கள் என்று சொன்னால், உட்கார வேண்டும். (குறுக்கீடு) நீங்கள்தானே காலையில் வந்து நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று சொன்னீர்கள். இப்படி அவர் மானியக் கோரிக்கையில் பேசுகிற மாதிரி பேசினால், நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தர முடியாது, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) இருங்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். Speaker–ஐ மிரட்டுகிற வேலையை எல்லாம் தயவுசெய்து விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) நான் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நியாயமாகக் கேட்டால் நான் நியாயமாக அனுமதி கொடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் நியாயமாகக் கேட்கவில்லையென்றால், நான் விதிகளின்படி அவையை நடத்த வேண்டியதிருக்கும். அவ்வளவுதான். (குறுக்கீடு) நான் கொடுத்த வாய்ப்பை நீங்கள் முறையாகப் பயன்படுத்துங்கள். அதை விட்டுவிட்டு என்னை நீங்கள் irritate செய்கிறமாதிரி... (குறுக்கீடு) முனைவர் பொன்முடி, நீங்கள் என்ன, என்னை மிரட்டுகிறீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் மிரட்டுகிற மாதிரி பேசுவதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். (குறுக்கீடு) அவ்வளவுதான் உங்களுக்கு வாய்ப்பு, உட்காருங்கள். வாய்ப்புத் தர மாட்டேன். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச்

சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தர முடியாது. அவர் என்னை என்ன கேள்வி கேட்டார் என்று தெரியுமா? திடீரென்று வந்து சொல்கிறீர்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தர முடியாது. முனைவர் பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடு) தர முடியாது. இதற்கு மேலும் நீங்கள் ஏதாவது பேசினீர்களென்றால் நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) உறுதியாக நான் நடவடிக்கை எடுப்பேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு குழு ஒன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுவின் தலைவராக நிதித் துறையின்* Additional Chief Secretary *அவர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எனக்கு நேரம் இருக்கும்போதுதான், வாய்ப்பு எப்படி இருக்கிறதோ அப்படித்தான் தர முடியும். (குறுக்கீடு) திரு. ஆஸ்டினுக்காக நான் சபையை நடத்த முடியாது. (குறுக்கீடு) திரு. ஆஸ்டினுக்காக நான் சபையை நடத்த முடியாது. எல்லோருக்காகவும்தான் நான் சபையை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்திருக்கின்றார்கள். கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையில் அந்தக் குழு அமைக்கப்பட்டு. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு அவ்வளவுதான் வாய்ப்பு. உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *அரசின் பல்வேறு சங்கங்கள்மூலம் அந்தக் குழுவிலே கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. (குறுக்கீடு) அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை அளிப்பதற்கு இன்னும் மூன்று மாத காலம் அவகாசம் கேட்டதன் அடிப்படையிலே, அந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*